ஜனவரி மாதம் முதல்

# டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே ரயில் இயக்கம்



▶ தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத், ஏஜி.டி.எம்.எஸ் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு நேற்று நேரில் வந்து, புதிதாக திறக்கப்பட உள்ள ஏஜி.டி.எம்.எஸ் முதல் வண்ணாரப் பேட்டை வரையிலான சுரங்க வழித்தடப்பகுதியில் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார்.

சென்னை, டிச. 7: சென்னை மெட்ரோ ரயில் சேவையின் 2வது வழித்தடமான பரங்கிமலை முதல் சென்னை சென்ட்ரல் இடையேயான பணிகள் சில மாதங்களுக்கு முன்பு முடிந்தது. தற்போது அந்த வழித்தடத்தில் ரயில்கள் இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் சென்னை மெட்ரோ ரயில் முதலாவது வழித்தடமான விமான நிலையம் - வண்ணாரப் பேட்டை இடையே டிஎம் எஸ் முதல், வண்ணார பேட்டை வரை பணிகள் முடிந்து சோதனை ஓட்டம் நடந்ததுள்ளது.

இந்நிலையில், டிஎம் எஸ் முதல் வண்ணாரப் பேட்டை வரையிலான 10 கி.மீ சுரங்கப்பாதையில் நடந்துவரும் பணிகளை தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் நேற்று பார்வையிட்டார். அவருடன் சென்னை மெட்ரோ ரயில் மேலாண்மை இயக்குனர் பங்கஜ் குமார் பன்சால், அதிகாரிகள் உடனிருந்தனர். இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில்களை அடுத்த மாதம் முதல் இயக்க மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

டிஎம்எஸ்-வண்ணாரப்பேட்டை இடையே ஆயிரம் விளக்கு, எல்ஐசி, அரசினர் தோட்டம், சென்னை சென்ட்ரல், உயர் நீதிமன்றம், மண்ணடி என 6 ரயில் நிலையங்கள் உள்ளன. இந்த 10 கி.மீ தூரம் மெட்ரோ ரயில் இயக்கப்படும்பட்சத்தில் சென்னையின் முக்கிய சாலையான அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசல் குறையும்.

அதே போல் அதிக கூட்ட நெரிசலுடன் காணப்படும் பூக்கடை பகுதிக்கும் எளிதில் சென்று வர முடியும்.

## மெட்ரோ ரயில் நிர்வாகம் இலக்கு

### கூவத்துக்கு கீழ் மெட்ரோ ரயில்

சென்னையின் முக்கிய ஆறுகளான அடையாறு, கூவம் ஆறுகளை கடந்து மெட்ரோ ரயில் செல்கிறது. அடையாறு ஆற்றை சைதாப்பேட்டை, ஜாபர்கான் பேட்டை ஆகிய இடங்களில் பாலம் மூலமும், கூவம் ஆற்றை அண்ணா நகர் மேற்கு பகுதியிலும் பாலம் மூலம் மெட்ரோ ரயில் கடக்கிறது. இந்நிலையில் டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை வழித்தடத்தில் அடுத்த மாதம் இயக்கப்பட உள்ள ரயில் கூவம் ஆற்றின்கீழ் இயக்கப்பட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.